# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.) குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 154 இன் கீழ்~~

(Under Section 173 BNSS)

C 8120371

1. District மாவட்டம் : ஈரோடு | PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு | Year ஆண்டு : 2025 | FIR No. மு.த.அ. எண் : 02/AC/2025 | Date நாள் : 24.03.2025

2. (i) Act சட்டம் : Pc Act 1988 as amended by — Sections பிரிவுகள் : 7(a)
   (ii) Act சட்டம் : the PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள் : —
   (iii) Act சட்டம் : — Sections பிரிவுகள் : —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 22.03.2025
   Date to நாள் வரை :
   Time Period நேர அளவு :
   Time from நேரம் முதல் : 16:00 hrs
   Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 24.03.2025
   Time நேரம் : 06:45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : GD VOL-I
   Time நேரம் : 24.03.2025 0815 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 35 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S.வருண்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : சுப்பிரமணியன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : வயது-29
   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் :
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : பொறியாளர்
   (g) Address : முகவரி : எண். 50/67, ஸ்ரீ முத்துக்குமரன் நகர், [illegible] [illegible] நிலையம் அருகில், கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சுப்பிரமணி, உதவியாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ______

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ______

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது!

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. [signature] 24/03/25

[signature] 24/3/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 24.03.2025 09 மணி

Name: பெயர் செ. ஆறுமுகம்,
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
மா.கு.பு.பிரிவு, ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr. No 2/AC/2025 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 24.03.2025 தேதி காலை 06.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.S.வருண் த/பெ சுப்பிரமணியன், 50/67 ஸ்ரீமுத்துக்குமரன் நகர், கம்பன் கல்வி நிலையம் அருகில், கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துபூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் S.வருண் வயது-29, த/பெ. சுப்பிரமணியன், 50/67 ஸ்ரீமுத்துக்குமரன் நகர், கம்பன் கல்வி நிலையம் அருகில், கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. ஐயா, நான் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூக்கா, முத்துக்குமரன் நகர், கம்பன் கல்வி நிலையம் அருகில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.E Structural Engineering படித்துவிட்டு கடந்த 6 வருடங்களாக கோவை மற்றும் சென்னையில் கட்டுமான வேலை செய்து வருகிறேன். தற்போது கோபிசெட்டிபாளையத்தில் செய்து வருகிறேன். எனது சொந்தக்காரர் Dr.அப்புராஜ் அவர்கள் கோபிசெட்டிபாளையத்தில் கிளினிக் வைத்து நடத்தி வருகிறார். அவருக்கு சொந்தமாக கோபிசெட்டிபாளையம், நஞ்சகவுண்டன்பாளையம் ரோட்டில், பைரவர் நகரில் சைட் எண். 27,28,29 ஆகிய எண்களில் வீட்டுமனை உள்ளது. அதில் வீடு கட்டவேண்டும் என்றும், என்னை கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு நான் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கட்டிட வரை பட அனுமதி பெறவேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னையே கட்டிட அனுமதி பெற்று பணிகளை தொடங்குமாறு வலியுறுத்தினார். அதன்படி நானும், கோபிசெட்டிபாளையத்தில் உள்ள நகராட்சியில் பதிவு பெறப்பட்ட பாலமுருகன் அசோசியேட் என்ற அலுவலகம் மூலமாக Dr.அப்புராஜ் அவர்களின் பெயரில் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு கட்டிட வரைபட அனுமதி வேண்டி 20.02.2025 ஆம் தேதி ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். கட்டிட உரிமை ஆணைக்கட்டணம் மற்றும் இதர கட்டணமாக கடந்த 01.03.2025ம் தேதி ஆன்லைன் மூலம் ரூ.1,72,960-ஐ கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு செலுத்தினேன். அதன் ரசீது எண் 057/CP/24-25/0008607 ஆகும். மேலும் கடந்த 13.03.2025ம் தேதி நேரடியாக Infrastructure and Amenity Deposit கட்ட வேண்டும் என்று கூறியதால் கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில்

ரூ.34,000-ஐ செலுத்தப்பட்டது. அதன் ரசீது எண் 057/01/01/24-25/0013872 ஆகும். அதனை தொடர்ந்து கடந்த 14.03.2025 கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையர் அவர்களின் கட்டிட அனுமதி உத்திரவு ஆன்லைனில் கிடைத்தது. ஆனால் அத்துடன் இணைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள அதற்கான அனுமதி வரைபடம் இணைக்கப்படாமல் இருந்தது. அதன் விபரத்தை Dr.அப்புராஜ் அவர்களிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் என்னையே கோபிசெட்டிபாளைய நகராட்சி அலுவலகத்தில் அனுமதி வரைபடத்தை பெற்று கட்டுமான வேலைகளை பார்க்குமாறு கூறினார். மேலும் இதுசம்மந்தமாக எங்களுக்குள் ஒரு எழுத்துமூலமான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டோம். நானும் பாலமுருகன் அசோசியேட் அலுவலகத்தை 21.03.2025 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு தொடர்பு கொண்டு வரைபடம் சம்மந்தமாக கேட்டபோது, கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் F1 செக்சனில் என்னை நேரில் வரச்சொன்னதாக என்னிடம் கூறினார். அதன்படி நானும் வரைபடம் சம்மந்தமாக கேட்பதற்காக 22.03.2025 ஆம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் தரைதளத்தில் இருந்த F1 செக்சன் சென்று, அங்கு பணியில் இருந்தவரிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். அவரது பெயர் சுப்பிரமணி F1 செக்சன் உதவியாளர் என்று தெரிந்து கொண்டேன். அப்போது அவர் என்னிடம் அவர்தான் என்னை வரச்சொன்னதாக சொல்லி, நிறைய செலவு இருக்குது, அப்பளை பன்னிட்டு, வாச்சொன்னா வரமாட்டேங்கறிங்க என்று கடுமையாக சொல்லி, 30,000/- ரூபாயை எங்க செலவுக்கு தனியா கொடுத்திருங்க என்று கேட்டார். அதற்கு நான் கொஞ்சம் குறைக்கமுடிமா என்று கேட்டேன். அதற்கு அவர் நான் உங்கள் டாக்டரிடம்தான் ரெகுலராக டிரிட்மெண்ட்டுக்கு போயிட்டிருக்கிறேன், அதனால நானே ரூ.10000/- குறைத்து தான் கேட்டிருக்கிறேன், நாங்க வழக்கமாக ஆயிரம் சதுரடிக்கு கட்டிட அனுமதி பெற ரூ.15000/-ம், 4 ஆயிரம் சதுரடிக்கு கட்டிட அனுமதி பெற ரூ.40000/- எங்கள் செலவுக்கு வாங்குவோம், ஆனால் நான் ரூ.30000/- தான் கேட்டிருக்கிறேன். இதுக்கு மேல குறைக்கிறதுக்கு வாய்ப்பில்லை என்று கறாராக சொல்லிவிட்டார். நான் அவரிடம் நகராட்சி அலுவலகத்தால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதியில் வரைபடம் இணைக்கப்படாமல் இருந்தது என்று சொல்லி அதுசம்மந்தமாக கேட்டபோது, முதலில் நான் கேட்ட பணம் ரூ.30,000/-ஐ கொண்டுவந்து கொடுங்கள், வரைபடம் ரெடியாகிவிடும் என்று கறாராக சொன்னார். நான் அவரிடம் ரூ.30,000/- த்தில் இருந்து கொஞ்சம் குறைக்கமுடியுமா என்று மீண்டும் கேட்டேன். அவரும் ரூ.30,000/- கண்டிப்பாக கொடுக்கவேண்டும் என்று முடிவாக சொல்லிவிட்டார். பிறகு நான் திங்கள் அல்லது செவ்வாய் கிழமை வருவதாக சொன்னேன். அதற்கு அவர் ஏற்கனவே லேட்டு, வரும் திங்கட்கிழமை பணத்தோட வந்திருங்க என்று சொன்னார். பிறகு, நான் யோசனை செய்ததில், கட்டிட அனுமதி சம்மந்தமாக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே லஞ்சமாக பணம்

ரூ.30000/- கேட்கும் மேற்படி F1 செக்சன் உதவியாளர் திரு.சுப்பிரமணி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (S.VARUN) 24.03.25 ஈரோடு 24.03.2025.

Sir, Received the above said tamil computer typed complaint on 24.03.2025 at 06.45 hrs. Sd/- (xxxxxxxx) 24.03.2025 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused Tr.Subramani, Assistant, Gobichettipalayam Municipality, Erode Distract today on 24.03.2025 at 08.15 hrs Sd/- (xxxxxxxx) 24.03.2025 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.S.Varun, s/o Subramanian, 50/67 Sree Muthukumaran Nagar, near Kamban Kalvi Nilaiyam, Gobichettipalayam, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

24/3/2025

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.